

கீழ்பென்னாத்தூர் தொகுதி துரிஞ்சாபுரம் கிழக்கு ஒன்றியத்தில் பேரவைத் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி தலைமையில், சி.என்.அண்ணாதுரை எம்.பி., வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்தார். உடன் ஒன்றிய நிர்வாகிகள் உள்ளனர்.

## பண்ருட்டி நகரில் முதல்வர் பிறந்த நாள் விழா!

பண்ருட்டி, மார்ச் 5 -

பண்ருட்டி நகர தி.மு.க. சார்பில் முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு , நகர கழக செயலாளர் க.இராஜேந்திரன் தலைமையில், கடலூர் மேற்கு மாவட்ட கழக அவைத் தலைவர் டாக்டர் கொ. நந்தகோபாலகிருஷ்ணன் முன்னிலையில் உறுதிமொழி ஏற்றுக்கொண்டு வார்டுகளில் கழக கொடிகள் ஏற்றி இனிப்புகள் அன்னதானம் வழங்கப்பட்டது.

தொடர்ந்து பண்ருட்டி பேருந்து நிலையம் எதிரில் ஏழை எளியவர்களுக்கு அன்ன தானம் வழங்கி தந்தை பெரியார் போக்குவரத்து நிர்வாகிகள் சார்பில் கழக கொடி ஏற்றி இனிப்புகள், நலத்திட்ட உதவிகள் வழங்கி கொண்டாடப்பட்டது.

மாவட்டத் துணை செயலாளர்கள் தணிகை செல்வம், ஆனந்தி சரவணன், மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் கதிர்காமன், நகர மன்ற துணை தலைவர் சிவா, நகர அவைத் தலைவர் ராஜா, நகர பொருளாளர் ராமலிங்கம், நகர துணை செயலாளர் கௌரி அன்பழகன், மாவட்ட பிரதிநிதி பிரபு , மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் பரணிசந்தர், மாவட்ட வர்த்தக அணி ராம் குமார் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## 'வாட்ஸ் அப்'பில் வலம் வருவது!




### அய்யா வைகுண்டர்

# போதித்த வழி நடந்து மனிதம் காப்போம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பதிவு!

சென்னை, மார்ச் 5 -

அய்யா வைகுண்டர் போதித்துச் சென்ற வழி நடந்து மனிதம் காப்போம் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலை தளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

அய்யா வைகுண்டர் அவர்களின் 193ஆம் பிறந்தநாளையொட்டி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:

**ஆதிக்க நெறிகளுக்கும் சாதியக் கொடுமைகளுக்கும் எதிராக வெகுண்டெழுந்து, சமத்துவத்துக்காகப் போராடிய அன்பின் திருவுரு அய்யா வைகுண்டர் அவர்களின் 193ஆம் பிறந்தநாள்!**

**“எளியாரைக் கண்டு இரங்கியிரு என் மகனே! வலியாரைக் கண்டு மகிழாதே என் மகனே!” என அவர் போதித்துச் சென்றவழி நடந்து மனிதம் காப்போம்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

### அ.நல்லதம்பி எம்.எல்.ஏ. தலைமையில் – முதல்வர் பிறந்த நாள்:

# திருப்பத்தூர் மாடப்பள்ளியில் பொதுக் கூட்டம்!

## சேலம் சுஜாதா, வேலூர் ரமேஷ், க.தேவராஜி எம்.எல்.ஏ. பங்கேற்பு!

திருப்பத்தூர், மார்ச் 5 -

திருப்பத்தூர் மேற்கு ஒன்றியம், மாடப்பள்ளி, அண்ணா திடலில், தமிழக முதல்வர் அவர்களின் 72 வது பிறந்தநாளை முன்னிட்டு மாபெரும் பொதுக் கூட்டம் திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அ. நல்லதம்பி தலைமையில் நடைபெற்றது.

கிளை கழக செயலாளர்கள், ஒன்றிய நிர்வாகிகள் முன்னிலையில் நடைபெற்ற இப்பொதுகூட்டத்தின் துவக்கத்தில் தலைமை கழக பாடகர்.பழனி மு. அப்பாஸ் இன்னிசை நிகழ்ச்சி நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து மாநில பிரச்சாரக்குழு செயலாளர் மற்றும் தலைமைக் கழக பேச்சாளர் சேலம்சுஜாதா சிறப்பு பேச்சாளராக கலந்து கொண்டார்.

மாவட்ட செயலாளரும், ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க.தேவராஜ், மாநில கொள்கை பரப்பு துணை செயலாளரும் தொகுதி பொறுப்பாளருமான வேலூர் ஜி.ரமேஷ் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள்.

இக்கூட்டத்தில் மாவட்ட அவைத்தலைவர். ஆர்.எஸ்.ஆனந்தன், நகர செயலாளர்.சு.இராசேந்திரன், பொதுக்குழு உறுப்பினர்கள் சு.அரசு, டி.ரகுநாத் மாவட்ட பொருளாளர். கே.பி.ஆர். ஜோதிராஜன், மாவட்ட துணை செயலாளர்.டி.கே. மோகன், ஒன்றியக்குழு தலைவர்கள்.விஜயா அருணாசலம், திருமதிதிரு முருகன் துணைத்தலைவர். டி. ஆர்.ஞானசேகரன், ஒன்றியக்குழு உறுப்பினர்கள். கஸ்தூரிரகு, இளவரசி இளங்கோ , ஒன்றிய நிர்வாகிகள் சி.சின்னதம்பி,சி.கழகரசு, டி.கே.சின்னதம்பி, எல். சிவலிங்கம், எம்.ராஜேந்திரன், எஸ்.சரவணன், வி. செல்வம், வி.அன்பழகன், அ.தேவராஜன், எஸ். சி.விஜயகுமார், பி.ஆர். சின்னபையன், ஒன்றிய கவுன்சிலர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், தேர்தல் பணிக்குழு பொறுப்பாளர்கள்,கிளை நிர்வாகிகள், பிரதிநிதிகள், மாவட்ட, ஒன்றிய அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், பெண்கள் மற்றும் கழக தோழர்கள் என இந்நிகழ்ச்சியில் திரளாக கலந்து கொண்ட இக்கூட்டத்திற்கு ஊராட்சி மன்ற தலைவர்.திருமதி.கோமதி கார்த்திகேயன் வரவேற்புரை வழங்கிடவும், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் அ.ஆதித்யா நன்றியுரையாற்றினர்.

### கழகத் தலைவர் , முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் விழா:

# கடலூர் மேற்கு மாவட்டத்தில் தெருமுனைப் பிரச்சார பொதுக்கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் சி.வி.கணேசன் அறிக்கை!



கடலூர், மார்ச் 5 -

கடலூர் மேற்கு மாவட்டத்தில் கழகத் தலைவர் முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு கழக அரசின் சாதனைகளை விளக்கி தெருமுனை பிரச்சார கூட்டம் நடைபெறுதல் முன்னிட்டு கடலூர் மேற்கு மாவட்டக் கழக செயலாளர் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் அறிக்கை விடுத்துள்ளார். அவரது அறிக்கை கீழ் வருமாறு: கழக தலைவர், முதலமைச்சர் இந்தியாவின் முதன்மையான முதலமைச்சர் திராவிட மாடல் நாயகர் மு.க. ஸ்டாலின் அவர்களின் “72 “ வது பிறந்த நாளை முன்னிட்டு கடலூர் மேற்கு மாவட்டம் திட்டக்குடி, விருத்தாசலம், நெய்வேலி, பண்ருட்டி, ஆகிய சட்டமன்ற தொகுதிகளில் 04.03.2025 செவ்வாய்க்கிழமை தேதியிட்ட முரசொலியில் எனது (சி. வி.கணேசன்) அறிக்கை விவரப்படி அந்தந்த இடத்தில் கழக அரசின் சாதனைகளை விளக்கி தெரு முனை பிரச்சார கூட்டம் இன்று 05.03.2025, மற்றும் நாளை 06.03.2025 ஆகிய இரண்டு நாட்கள் நடைபெறுகிறது. அதுசமயம் மாவட்டக் கழக நிர்வாகிகள், முன்னாள் இந்நாள் சட்ட மன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு, பொதுக்குழு, உறுப்பினர்கள், ஒன்றியக் கழக, நகர கழக, பேரூர் கழக , கிளை, வார்டு, கழக செயலாளர்கள் நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், மற்றும் கழக மூத்த முன்னோடிகள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.

### முன்னாள் பால்வளத்துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர்

# காந்தி கருணாநிதி மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!



சென்னை, மார்ச் 5 -

திராவிட இயக்கப் போராளி காருகுடி சின்னையா பேரனும்,முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் உற்ற நண்பர் மாயூரம். சி.காந்தி அவர்களின் மகனும் கடந்த அறுபது ஆண்டுகளாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் தீவிர செயல்பாட்டாளரும், மேனாள் பால்வளத்துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர்,ஆவின் நிறுவனத்தின் ஒய்வு பெற்ற மேலாளர் (கணக்குகள்) கவிஞர், ‘வணக்கம் தமிழ்நாடு’ மின்னிதழ் முதன்மை செய்தியாளரும் ஆன முனைவர். காந்தி கருணாநிதி(வயது 69) உடல்நிலை குறைவால் மியாட் மருத்துவமனையில் நேற்று (04.03.2025) இயற்கை எய்தினார் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்னாரது இறுதி நிகழ்வுகள் இன்று (05.03.2025 ) 1/732,கிருஷ்ணவேணி நகர், விரிவாக்கம் II ,முகலிவாக்கம்,சென்னை600 125. என்ற முகவரியில் நண்பகல் 12 மணியளவில் நடைபெறுகிறது.

தொடர்ந்து முகலி வாக்கம் மின் மயானத்தில் தகனம் செய்யப்படுகிறது.

இச்செய்தியறிந்து கழக முன்னணியினர், ஆவின் ஊழியர்கள் அன்னாரது உடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்தினர்.

### பேரவைத் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி தலைமையில்!

# துரிஞ்சாபுரம் கிழக்கு ஒன்றியத்தில் வாக்காளர்களுக்கு நன்றி!

## சி.என்.அண்ணாதுரை எம்.பி. தெரிவித்தார்!

திருவண்ணாமலை, மார்ச் 5 -

திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பென்னாத்தூர் சட்டமன்ற தொகுதி துரிஞ்சாபுரம் கிழக்கு ஒன்றியத்திற்குட்பட்ட வட ஆண்டாப்பட்டு, கிளியாப்பட்டு, சடையனோடை, சானானந்தல், களஸ்தம்பாடி, கார்கோணம், கோவூர், ஆர்ப்பாக்கம், பூதமங்கலம், வேடந்தவாடி, குன்னியந்தல், வள்ளிவாகை, வி.நம்மியந்தல், இராந்தம், நூக்காம்பாடி, பாலானந்தல், மங்கலம், கருமராப்பட்டி, கொத்தந்தவாடி, எரும்பூண்டி ஆகிய பகுதிகளில் சட்டபேரவைத் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி தலைமையில் திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை வாக்காளர்களை சந்தித்து நன்றி தெரிவித்தார்.

ஒன்றிய செயலாளர்கள் அண்ணாமலை, பாரதிராமஜெயம், பொதுக்குழு உறுப்பினர் பாலு முன்னாள் ஒன்றிய குழு தலைவர் தமயேந்தி ஏழுமலை, முன்னாள் ஒன்றிய குழு துணை தலைவர் உஷாராணி சதாசிவம், மாவட்ட இலக்கிய அணி துணை அமைப்பாளர் மங்கலம் பிரபாகரன், மாவட்ட பிரதிநிதி பாலானந்தல் மோகன், சுந்தரமூர்த்தி, முன்னாள் ஒன்றிய குழு உறுப்பினர்கள்;, முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர்கள்; அன்பு பாண்டியன், இளைஞரணி துணை அமைப்பாளர் சக்தி, நகர இளைஞரணி துணை அமைப்பாளர் ராஜேந்திரன், கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனார்.



முதல்வர், கழகத் தலைவர் அவர்களின் 72 ஆவது பிறந்த விழா நிகழ்ச்சி கடலூர் மேற்கு மாவட்டம் நெய்வேலி சட்டமன்றத் தொகுதி பண்ருட்டி தெற்கு ஒன்றியம் பெரியபுறங்கனி ஊராட்சியில் நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா.இராஜேந்திரன் தலைமையில் வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டது. நிகழ்ச்சியில் கழகத்தின் இரு வண்ணக் கொடி ஏற்றி ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு அன்னதானம் மற்றும் 720 தென்னை மரக்கன்றுகள் வழங்கப்பட்டது ஒன்றிய பெருந்தலைவர் சபா. பாலமுருகன் பண்ருட்டி ஒன்றிய அவைத்தலைவர் ராஜா, தலைமை பொதுக்குழு உறுப்பினர் அறிவழகன், மாவட்ட பிரதிநிதி ஆடலரசன், ஒன்றிய துணை செயலாளர் செல்வகுமார், நெய்வேலி நகர செயலாளர் குருநாதன் குறிஞ்சிப்பாடி மேற்கு ஒன்றிய செயலாளர் குணசேகரன், பண்ருட்டி வடக்கு ஒன்றிய செயலாளர் சந்தோஷ்குமார், குறிஞ்சிப்பாடி மேற்கு ஒன்றிய அவைதலைவர் வீர.ராமச்சந்திரன், வழக்கறிஞர் ஹரிதாஸ், புறங்கனி சதீஷ், கிளை செயலாளர்கள் நந்தகோபால கிருஷ்ணன், ஆனந்த்,சக்திவேல், வேல்முருகன், சந்தோஷ், ரகுபதி,அருள்ஜோதி, கருணாநிதி, டாக்டர் செந்தில், தினகரன், கார்த்திகேயன், செந்தில், கலைச்செல்வன், குறிஞ்சிப்பாடி மேற்கு ஒன்றிய இளைஞரணி செயலாளர் பாக்யராஜ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### சிவகங்கை மாவட்டத்தில்

# 22 முதல்வர் மருந்தகங்கள் துவக்கம்!

சிவகங்கை, மார்ச் 5 -

தமிழக முதல்வர் தளபதி அவர்கள் நேற்று முன் தினம் மக்களுக்கு மலிவு விலையில் மருந்துகள் கிடைக்க வேண்டும் என்று அடிப்படையில் முதல் கட்டமாக1000 முதல்வர் மருந்தகங்களை சென்னையிலிருந்து காணொலி காட்சி மூலம் திறந்து வைத்தார். இதில் சிவகங்கை மாவட்டத்தில் கூட்டுறவுத் துறை சார்பாக14ம் தனியார் சார்பில் 8 ஆக மொத்தம் 22 முதல்வர் மருந்தகங்கள் திறக்கப்பட்டது .இதில் சிவகங்கை ஏ.கே.ஆர் நகரில் திருமதி வீ.பிரதீபா நடத்தி வரும் முதல்வர் மருந்தகத் தின் முதல் விற்பனையை மாவட்ட ஆட்சியர் திருமதி ஆசாஅஜித் துவக்கி வைத்தார் மருந்துகளின் விலைகள் மற்றும் பொதுமக்களிடம் மருந்தகம் பயன்கள் குறித்து கேட்டறிந்தார் .இந்த நிகழ்ச்சியில் மண்டல கூட்டுற வுத் துறை இயக்குனர் ராஜேந்திர பிரசாத் , துணை இயக்குனர்கள் ஜெய்சங்கர், பாரதி, பாம்கோகுமரன், பொது வினியோகம் பாபு, முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் கோவிந்தன் மற்றும் தொ.மு.ச. சார்பில் மாவட்ட பொதுச் செயலாளர் பச்சைமால் ,பொருளாளர் ராஜேந்திரன் உறுப்பினர்கள் செந்தில்குமார், ஆனந்தன், சிவானந்தம், மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டார்கள் மாவட்டத்தில்சிவகங்கை நகரில் 2,இளையான்குடி மானாமதுரையில் தலா1 காரைக்குடியில்3, தேவகோட்டையில் 1, கூட்டுறவுத்துறை சார்பில் சிவகங்கை, திருப்புவனம், காளையார் கோவில் , சாக்கோட்டை, தேவகோட்டை ,நாகமங்கலம், சிங்கம் புனரி, பிள்ளையார் பட்டி ,மானகிரி உட்பட மாவட்டம் முழுவதும் 22இடங்களில் முதல்வர் மருந்தகங்கள் செயல்படுகிறது.




கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டக் கழகத்திற்குட்பட்ட இளைஞரணி நிர்வாகிகள் அறிமுகம் கூட்டம், கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டக் கழக செயலாளரும், ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினருமான வசந்தம் க.கார்த்திகேயன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கழக மாநில இளைஞரணி துணைச் செயலாளர் அப்துல் மாலிக், கழக செய்தி தொடர்பு இணைச் செயலாளர் சூர்யா கிருஷ்ணமூர்த்தி, சமூக வளைதள பயிற்சியாளர் அன்பகம் இளமாறன் ஆகியோர் கலந்து கொண்டு, புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக இளைஞரணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்களுக்கு கழக ஆக்கப் பணிகள் குறித்து எடுத்துரைத்து இந்தி திணிப்புக்கு எதிராக உறுதி மொழியும் ஏற்றுக்கொண்டனர், மேலும் இந்த நிகழ்வில், கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன் மற்றும் ஒன்றிய, நகர,பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.




நெய்வேலி கலை இலக்கிய சங்கத்தின் 105 வது மாத நிகழ்வாக தமிழ்ச் சான்றோர்களை போற்றுதல் நிகழ்ச்சியும் பேச்சு அரங்கம் நிகழ்ச்சியும் கவியரங்கம் நிகழ்ச்சியும் இனிதே நடைபெற்றது. பொருளாளர் முனைவர் நந்தா தலைமை வகித்தார். சிறப்பு விருந்தினர்களாக நெய்வேலி ஜவகர் கல்லூரியின் மேனாள் முதல்வர் தி.வெ.சந்திரசேகரன், வடலூர் ஏரிஸ் கல்லூரியின் மேனாள் முதல்வர் ச.தியாகராஜன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். சங்கமம் தலைவர் முனைவர் வல்லம் கோவி முன்னிலை வகித்தார். சங்கமம் செயலாளர் மாரியப்பன் வரவேற்புரையாற்றினார். கவிஞர்கள் அபிநயா யாழினி, மேகவண்ணன், கவியரசி, வெங்கடாசலம், தாமரைச்செல்வன், கயல்விழி, சண்முகம், ஏழுமலை, குமாரசாமி, சுப்பிரமணியன், குமரகுருபரன், வீரமணி, காளீஸ்வரி மற்றும் பலர் கலந்துகொண்டு உரையாற்றினர்.